# உள்ளடக்கம்

1. செய்திகள்
1.1. மாவட்டச் செயலாளர் / அரசாங்க அதிபர்.......... III

2. மாவட்டச் செயலகம் பற்றிய அறிமுகம்
2.1. தூரநோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள் .......... 01
2.2. எதிர்பார்ப்பு மற்றும் செயலக நடவடிக்கைகள்.......... 02

3. மாவட்டம் பற்றிய அறிமுகம்
3.1. மாவட்டத்தின் எல்லைகள்.......... 04
3.2. மாவட்டத்தின் வரலாற்று முக்கியத்துவம்.......... 06
3.3. மாவட்டத்தின் இயற்கை வளங்கள் .......... 10
3.4. மாவட்டத்தின் வாழ்வாதாரம் மற்றும் பொருளாதாரம் .......... 10
3.5. மாவட்டத்தின் நீர்ப்பாசன முறை.......... 11
3.6. மாவட்டத்தின் சனத்தொகை பரம்பல்.......... 12
3.7. மாவட்டத்தின் காலநிலை .......... 13
3.8. மாவட்டத்தின் அடிப்படை புள்ளி விபரங்கள்.......... 13

4. அலுவலக ஒழுங்கமைப்பு மற்றும் ஆளணி விபரம்
4.1. அலுவலக ஒழுங்கமைப்பு வரைபடம் .......... 14
4.2. ஆளணி விபரம்.......... 15

5. செயலாற்றுகை
5.1. பொது நிர்வாகச் செயற்பாடுகள் .......... 17
5.1.1. நிர்வாகக்கிளையின் செயற்பாடுகள் .......... 17
5.1.2. கிராம அலுவலர் பிரிவுகள்.......... 17
5.1.3. வருமானச் சேகரிப்பு செயற்பாடுகள் .......... 18
5.1.4. உள்ளகக் கணக்காய்வின் நடவடிக்கைகள் .......... 19
5.1.5. மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் செயற்பாடுகள்.......... 20
5.1.6. தேர்தல்கள் திணைக்களச் செயற்பாடுகள்.......... 20
5.1.7. பதிவாளர் நாயகத் திணைக்களச் செயற்பாடுகள்.......... 21
5.1.8. அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகள் .......... 22

5.1.9. மோட்டார் போக்குவரத்துத் திணைக்களச் செயற்பாடுகள்............................ 22
5.1.10. ஓய்வூதியச் செயற்பாடுகள்................................................................................ 23
5.1.11. தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களச் செயற்பாடுகள்........................ 24
5.1.12. பயிற்சிகளும் இயலளவு மேம்படுத்துகையும்................................................ 24
5.1.13. தகவல் தொழில்நுட்பப் பூங்காவின் செயற்பாடுகள்...................................... 25

5.2. கலாசார மற்றும் சமூக சேவை
5.2.1. கலாசார மற்றும் சமயச் செயற்பாடுகள்........................................................ 26
5.2.2. பெண்கள் அபிவிருத்தி தொடர்பான செயற்பாடுகள்...................................... 29
5.2.3. சிறுவர் அபிவிருத்திச் செயற்பாடுகள்............................................................ 29
5.2.4 தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் செயற்பாடுகள்...................... 29
5.2.5. சமூக சேவைகள் செயற்பாடுகள்...................................................................... 29
5.2.6. மாவட்ட விளையாட்டுப் பிரிவின் செயற்பாடுகள்.......................................... 30
5.2.7. கிராம அபிவிருத்தித் திணைக்களச் செயற்பாடுகள்...................................... 31

5.3. அபிவிருத்தி - 2015
5.3.1. பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் மூலதன வேலைத்திட்டங்கள் -2015........................................................................................ 31
5.3.2. திவிநெகும அபிவிருத்தித் திணைக்களச் செயற்பாடுகள்............................... 33
5.3.3. காணி விவசாயத் திணைக்களச் செயற்பாடுகள்............................................ 34
5.3.4. காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் அபிவிருத்திச் செயற்பாடுகள்.................. 35
5.3.5. பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழான செயற்பாடுகள் 2015.......... 36
5.3.6. வரிசைப்படுத்தப்பட்ட அமைச்சுக்களினதும் ஏனைய திணைக்களங்களினதும் செலவின விபரம்.................................................... 39

5.4. வருடாந்த கணக்குகள்
5.4.1. டிஜிஎஸ்ஏ – 2.................................................................................................. 41
5.4.2. டிஜிஎஸ்ஏ – 3.................................................................................................. 42
5.4.3. டிஜிஎஸ்ஏ – 4.................................................................................................. 43
5.4.4. டிஜிஎஸ்ஏ – 5 (i)............................................................................................ 44
5.4.5. வருமானக் கணக்கு.......................................................................................... 45
5.4.6. குறிப்பு – (ii).................................................................................................... 46

## மாவட்டச் செயலகம் - மன்னார்

### மாவட்டச் செயலாளர்/ அரசாங்க அதிபரின் செய்தி




2015ம் ஆண்டுக்குரிய மன்னார் மாவட்ட செயலகத்தின் கணக்கறிக்கையின் அடைவு தொடர்பான அறிக்கையினை சமர்ப்பிப்பதனையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இவ்வறிக்கையானது மன்னார் மாவட்ட செயலகம், ஐந்து பிரதேச செயலகங்கள் மற்றும் அமைச்சுக்களின் கீழ் இயங்கும் திணைக்களங்களின் திறமையான நிகழ்ச்சிகள், திட்டங்கள், செயல்பாடுகள் மற்றும் சிறப்பாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் திட்டங்களை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது.

இச்செயற்பாடுகளுக்கான நிதியானது 2015 ம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் இந்நிதியானது சிக்கனமாகவும் திறனான முறையிலும் பயன்படுத்தப்படல் வேண்டுமெனும் அடிப்படையில் ஒதுக்கப்பட்டுள்ளது. இச்சேவையானது, அனைத்து திணைக்களங்களின் கிளைகள் மற்றும் பிரதேச செயலகங்கள் அனைத்தும் மாவட்ட செயலகத்துடன் இணைந்து மிகவும் பலமான முறையில் செயல்பட வழிவகுக்கின்றது.

மேலும் திவிநெகும நிகழ்ச்சித்திட்டங்கள், 100 நாள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கிராம அபிவிருத்தி திட்டங்கள் திருப்தியான முறையில் முன்னெடுக்கப்படும் திட்டங்களாகும். இதனைவிட ஏனைய வரிசைப்படுத்தப்பட்ட அமைச்சுக்களின் கீழ் ஒதுக்கப்படும் ஒதுக்கீட்டின் கீழ் குறிப்பிட்ட நிகழ்ச்சித்திட்டங்களை மிகவும் பயனுள்ள முறையில் மன்னார் மாவட்டத்தில் நடைமுறைப்படுத்துவதும் குறிப்பிட்டுக் காட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

மேலும் இச்செயற்பாடுகளுக்காக பொதுமக்களின் தொழில் முன்னேற்றத்திற்கும் பொருளாதார முன்னேற்றத்திற்கும் பல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கியவர், உதவி நல்கியவர்கள், இம்மாவட்டத்தின் மக்களின் அபிவிருத்தி செயல்பாடுகளில் பங்கு பற்றியவர்கள் மற்றும் இதனைத்தவிர, மக்களுக்கு மிகவும் தரமானதும் பயனுள்ளதுமான சேவையை வழங்க பல வழிகளிலும் அறிவுரை வழங்கியவர் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இறுதியாக எனது சேவைக்கூடாகவும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு மற்றும் திணைக்களங்கள் வழங்கிய அறிவுரைகள் என்பவையும் மக்களுக்கு திறமையானதும் பயனுள்ளதும் தரமானதுமான சேவையை வழங்க பல வழிகளிலும் உதவியவர்களுக்கும் மீண்டும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிறப்பாக இந்தச் சந்தர்ப்பத்தில் தொடர்ச்சியாகவும் வினைத்திறனுடனும் எல்லா விடயங்களிலும் ஒத்துழைப்பு வழங்கி வரும் அனைத்து பிரதேச செயலாளர்கள் மாவட்ட செயலக திணைக்கள தலைவர்கள் மற்றும் ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து அலுவலர்களுக்கும் எனது விசேடமான நன்றியைத் தெரிவிப்பது எனது தலையாய கடமையாகும்.

நன்றி!

எம்.வை.எஸ் தேசப்பிரிய
மாவட்டச் செயலாளர் / அரசாங்க அதிபர்
மன்னார் மாவட்டம்

# 2. மாவட்டச் செயலகம் பற்றிய அறிமுகம்

## 2.1 தூரநோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்

### தூரநோக்கு

நிலையான அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுத்து செல்வதன் மூலம் மன்னார் மாவட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல்.

### பணிக்கூற்று

அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களின் நடவடிக்கைகளை இணைத்து கண்காணிப்பதன் மூலம் அந்நிறுவனங்களின் செயலாற்றுகையை முன்னேற்றுவதுடன் அரசாங்கத்தினதும் பொதுமக்களினதும் எதிர்பார்ப்பிற்கமைய குறைந்த செலவில் தரமான வினைத்திறன்மிக்க சேவையினை வழங்குதல்.

### குறிக்கோள்

மாவட்டச் செயலகத்தின் குறிக்கோளானது அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் வேறுபட்ட சட்டங்களின் மூலம் கையளிப்புச் செய்யப்பட்ட தொழிற்பாடுகளை ஒருங்கிணைப்புச் செய்தலும், சமூகப்பொருளாதார அபிவிருத்தி கருத்திட்டங்களை உருவாக்குதலும், அவற்றை கண்காணித்து நெறிப்படுத்துவதுடன் அவற்றின் நன்மைகளை சம்மந்தப்பட்டோர் அனுபவிப்பதை உத்தரவாதப்படுத்துதல்.

## 2.2 எதிர்பார்ப்பு மற்றும் செயலக நடவடிக்கைகள்

- மாவட்ட மற்றும் பிரதேச மட்டச் செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள் உத்தியோகத்தர்களின் அனைத்துக் கடமைகளும் அது தொடர்பான நடவடிக்கைகள். (சுயவிபரக் கோவை, விடுமுறைகள், சம்பளம், மேலதிக நேரக் கொடுப்பனவு, விடுமுறை நாட் கொடுப்பனவு, ஊழியர்களின் புகையிரத ஆணைச்சீட்டு, கடன் மற்றும் ஏனைய நடவடிக்கைகள்)

**பின்வரும் சேவைகளை மக்களுக்கு வழங்குவது அல்லது ஏனைய நிறுவனங்கள் மூலம் சேவைகளைப் பெற்றுக்கொள்ள இணைப்பினை ஏற்படுத்துதல்.**

- கடவுச்சீட்டு, தேசிய அடையாள அட்டை, வியாபாரப் பதிவுச்சான்றிதழ், பிறப்பு இறப்பு மற்றும் விவாகச் சான்றிதழ், மோட்டார் போக்குவரத்து இறைவரி அனுமதிப்பத்திரம்.
- பாதை அனுமதிப்பத்திரங்கள் வழங்குவது தொடர்பான நடவடிக்கைகள்.
- தேருநர் இடாப்பு பராமரித்தல் மற்றும் வழங்குதல்.
- காணிக்கான உறுதிகள் மற்றும் காணி பிணக்குகளை தீர்த்து வைத்தல்.
- வயோதிபர்களுக்கான கொடுப்பனவுகளை ஒதுக்கீடு செய்து வழங்குதல்.
- உளவியல் ரீதியாகவும், மனோ ரீதியாகவும் பாதிப்படைந்த மக்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்கும் உடல் நலத்திற்கும் ஆலோசனை வழங்குதல் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- பெண்களை தலைவர்களாகக் கொண்ட குடும்பங்களுக்கு பயிற்சி மற்றும் ஊக்குவிப் புக்களை வழங்குதல்

**நிதி நடவடிக்கைகள் மற்றும் பரிமாற்றல் நடைமுறைகள் மூலம் எழுச்சிக்குள்ளாக்கி இலக்குகளை அடையும் மேலதிகமான செயல், பணிகள்**

- வினைத்திறமையுடன் (அனுமதியுடன் ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம்) செலவினங்களை மேற்கொள்ளலும் கணக்கு வைத்தலும்.
- ஊழியர்களுக்கான எல்லாவித கொடுப்பனவுகளையும் மேற்கொள்ளுதல்.
- கச்சேரியின் நானாவித வைப்புகளிலிருந்து நிதிப்பகிர்வு மற்றும் உரிய கட்டுப்பாடுகளை மேற்கொள்ளுதல்.
- மாதாந்த, வருடாந்த கணக்குகள் மற்றும் ஏனைய கணக்கு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு உரிய திணைக்களங்களுக்கும், பொது திறைசேரிக்கும் அனுப்பி வைத்தல்.
- மாவட்டம் மற்றும் பிரதேச செயலகங்கள் மூலம் கிடைக்கப்பெறும் வழங்கல், சேவைகள் ஆகியவற்றிற்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல்.
- வருடத்திற்கான கொள்ளல் திட்டங்களை தயாரித்தல், வருடாந்த சுற்றாய்வுகளை (பொருட்கணக்கெடுப்பு) மேற்கொள்ளுதல்.

**கலை கலாசார பண்புகளையும், விழுமியங்களையும் அதன் உயர் மதிப்புகளையும் ஊக்குவிக்கும் அமைப்பு நடவடிக்கைகள்**

- மாவட்ட கலாசார, விளையாட்டு நிகழ்வுகள், தேசிய மட்ட, மாவட்ட மட்ட, விழாக் கொண்டாட்டங்களில் ஈடுபடுதல்.

**மாவட்ட வளங்களை பயன்படுத்தி வினைத்திறனுள்ள பயன்பாட்டுடன் திட்டங்களை வடிவமைத்தல்**

- மாவட்ட திட்டமிடல் காணிப் பகிர்வு பயன்பாட்டுத் திட்டமிடல் பிரிவு
- கைத்தொழில் துறை அபிவிருத்திப் பிரிவு
- மாவட்ட விவசாய பிரிவு

**பொது மக்களை அனர்த்தத்திலிருந்து பாதுகாத்தல்**

- இயற்கை அனர்த்தங்களிலிருந்து பொது மக்களை பாதுகாத்தல் (வெள்ளம், மண்சரிவு, வரட்சி) அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்புடன் பாதிப்புக்குள்ளான மக்களுக்கு ஆரம்ப வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல்.

**மாவட்டத்தின் அடிப்படை புள்ளி விபரங்களை சேகரித்தலும், பராமரித்தலும்**

- மாவட்டத்தின் புள்ளிவிபரக்கிளையின் மூலம் புள்ளி விபர நிகழ்வு பூர்த்திசெய்யப்படுகின்றது.

**பிரதேச மட்டத்திலான நிலையான அபிவிருத்திகள்**

- வீதிகள், நீர்ப்பாசனம் மற்றும் மின்சார வசதிகள் தொடர்பான அபிவிருத்திகள்
- பன்முகப்படுத்தப்பட்ட பாதீடுகள் மூலம் கிடைக்கப்பெறும் நிதி மூலத்தின் மூலம் மாவட்டத்திற்கான அபிவிருத்திகளை மேற்கொள்ளும் பொருட்டான நிதி பங்கீடும், வினைத்திறன் மிக்க கண்காணிப்பும்.
- அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தலும் மேற்பார்வை செய்தலும் (திவி நெகும)
- வீடமைப்புத்திட்டங்களுக்கான வசதிகளை ஒழுங்கு செய்து வழங்குதல்
- போரினால் பாதிப்படைந்த மக்களுக்கு நட்டஈடு வழங்குதல்

# 3. மாவட்டம் பற்றிய அறிமுகம்

## 3.1 மாவட்டத்தின் எல்லைகள்:

மன்னார் மாவட்டமானது இலங்கையின் வடமேற்கு திசையில் அமைந்துள்ளது. இம் மாவட்டமானது, இலங்கைத் தீவின் ஒரு பகுதியாக அமைந்துள்ளது. இம்மாவட்டமானது கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, அநுராதபுரம் மற்றும் புத்தளம் மாவட்டங்களினால் சூழப்பட்டுள்ளது. இது சிறு கரையோரப் பாதை மூலம் நாட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது பரப்பளவானது 2,002 சதுர கிலோ மீட்டராகும் ஆகும். ஐந்து பிரதேச செயலகப் பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவையாவன: மன்னார் நகரம், நானாட்டான், முசலி, மடு, மாந்தை மேற்கு ஆகும்.



## பிரதேச செயலகவாரியாகப் பரப்பளவு

| பிரதேச செயலகங்களின் விபரம் | பரப்பளவு | |
|---|---|---|
| | சதுர Km | வீதம் |
| மன்னார் நகரம் | 226.88 | 11.33 |
| நானாட்டான் | 129.25 | 6.46 |
| முசலி | 474.22 | 23.69 |
| மாந்தை மேற்கு | 658.90 | 32.91 |
| மடு | 512.82 | 25.61 |
| **மொத்தம்** | **2,002.07** | **100.00** |








## 3.2 மாவட்டத்தின் வரலாற்று முக்கியத்துவம்:

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல அம்சங்களை மன்னார் மாவட்டம் கொண்டுள்ளது. திருக்கேதீஸ்வரத் திருத்தலம், மடு மாதா தேவாலயம், மன்னார்க்கோட்டை, அரிப்புக்கோட்டை, அரிப்பு அல்லி ராணிக்கோட்டை, ராமர் பாலம், தொங்குபாலம், வெளிச்சவீடு மற்றும் பெருக்குமரம் (Biobap Tree) போன்ற அதிசயங்கள் இம்மாவட்டத்தில் அமைந்துள்ளன.





















ஈழத்து சிவாலயங்களுள் வரலாற்று புகழ் மிக்கதாகவும், 7ம் 8ம் நூற்றாண்டுகளில் நாயன்மார்களால் பாடல் பெற்ற பெருமைக்குரியதாகவும் திகழ்ந்து வருகின்றது. மன்னாரிலிருந்து தென் திசையாக சுமார் 6.5 மைல் தூரத்திலும், வடமேல் கடலோரத்திலிருந்து சுமார் 0.5 மைல் தூரத்திற்கப்பாலும் திருக்கேதீஸ்வர திருத்தலம் அமைந்துள்ளது. 16ம் நூற்றாண்டில் போர்த்துக்கேயரினால் முழுமையாக அழிக்கப்பட்டது. மீண்டும் 1903ம் ஆண்டு மீளமைக்கப்பட்டது 1ம் கும்பாபிஷேகம் 1952ம் ஆண்டு இடம்பெற்றது.

வன்னிக்காட்டில் அமைந்துள்ள மடுத்திருத்தலம் வரலாற்றுப் பூர்வீகமானது என்பதில் எவ்வித கருத்து வேறுபாட்டிற்கும் இடமில்லை. வரலாற்றுக் குறிப்பின் படி 1659ம் ஆண்டு மாசி மாதம் 22ம் திகதி மன்னார் டச்சு ஆட்சியின் கைப்பற்றலில் வீழ்ந்த பொழுது பல சட்டங்கள் உருவாக்கப்பட்டன. இதன் பொருட்டு மாந்தை நகரிலிருந்து வன்னிக்காட்டிலுள்ள குளத்தை அண்டி ஆரோக்கிய அன்னையின் சுரூபத்தோடு குடியேறியதே இத்திருத்தலம் ஆகும்.







மன்னாரின் பிரபல்யத்திற்கு காரணமான பெருக்க மரம் அரேபிய வியாபாரிகளினால் 15ம் நூற்றாண்டிற்கு முன்னர் கொண்டுவரப்பட்டது. மன்னார் பள்ளிமுனையில் காணப்படும் இப் பெருக்க மரமானது 7.5மீட்டர் உயரத்தினையும் 19.51 மீட்டர் சுற்றளவினையும் கொண்டது. இம் மரமானது சுமார் 750 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. வியாபார நோக்கத்திற்காக இங்கு வந்த அரேபியர்களின் உணவுத் தேவையை இது பூர்த்தி செய்தது. நீள்வட்ட வடிவ பழத்தினையும் கொண்டது.




இவ்வெளிச்ச வீடானது 1915ம் ஆண்டு கட்டப்பட்டது. இது 64 அடி உயரத்தினை கொண்டது. இவ்வெளிச்சவீட்டின் வெளிச்சமானது ஒவ்வொரு 5 செக்கனிற்கும் வெளிச்சத்தைக் கொடுப்பதுடன் இதன் ஒளியானது 10 கடல் மைல் தொலைவு வரையும் தென்படும் என கூறப்படுகின்றது. இது மன்னாரின் வடமேல் திசையிலுள்ள தலைமன்னாரில் அமைந்துள்ளது. தலைமன்னாரிலுள்ள துறைமுகம் ஊடாக இந்தியாவிற்கு பயணத்தை மேற்கொள்ளும் பயணிகளுக்கு உதவியாகவுள்ளது.

இத்தொங்கு பாலமானது 1935ம் ஆண்டு அருவியாற்றைக் கடப்பதற்காக அமைக்கப்பட்டது. இப்பாலமானது மதவாச்சி மன்னார் வீதியிலுள்ள மடுச்சந்தியிலிருந்து அதனையொட்டியதாக குஞ்சுக்குளம் என்னும் கிராமத்தில் உள்ளது. இப்பாலத்தின் நீளம் 150m அகலம் 1.2m ஆகும். மழைக்காலத்தில் இப்பாலத்தின் மேலாக நீர் பாய்வதுடன் கிராமத்தினையும் ஊடறுத்து நீர் பாயும் எனவும் கூறப்படுகின்றது. மக்கள் இப்பாலத்தினை ஒரு பொழுது போக்கிடமாக பாவனை செய்து மகிழ்கின்றார்கள்.







இக்கோட்டையானது போர்த்துக்கேயரால் கட்டப்பட்டதுடன் 1658ம் ஆண்டு ஒல்லாந்தரினால் கைப்பற்றப்பட்டது. இது ஆங்கிலேய கப்பல் தளபதியான றோபட்நொக்ஸ் என்பவரிடமிருந்து 2ம் ராஜசிங்கனால் 1659ம் ஆண்டு கைப்பற்றப்பட்டது. இலங்கையின் "பெற்றிக்நோத்" என்பவரின் ஆட்சிக்காலத்தில் உத்தியோகத்தரின் சுற்றுலா விடுதியாக மாற்றப்பட்டது.







இவ் அல்லிராணிக் கோட்டையானது மன்னார் நகரிலிருந்து சுமார் 45km தூரத்தில் உள்ள முத்தரிப்புத் துறையில், அமைந்துள்ளது. அக்கோட்டையிலிருந்து மாதோட்டத்திற்கான ஒரு சுரங்கப் பாதை இருப்பதாக நம்பப்படுகின்றது. கோட்டையின் பல பகுதிகள் கடலரிப்பினால் அரிக்கப்பட்டுள்ளதுடன் அடையாளச்சுவடுகள் மாத்திரம் மிச்சமாக உள்ளது. இக் கோட்டையின் கீழ் தளத்தில் சிறிய 4 படுக்கை அறைகளும் 1ம் மாடியில் மிகப் பெரிய சாப்பாட்டு அறையும், சிறப்பான படுக்கை அறை ஒன்றும் காணப்படுகின்றன. டொரிக் என்பவரால் இக்கோட்டையின் வரைபடம் வரையப்பட்டு அவரின் மேற்பார்வையின் கீழ் கட்டப்பட்டது.









இக்கோட்டையானது மன்னார் நகரில் போர்த்துக்கேயரினால் 1560ம் ஆண்டில் கட்டப்பட்டது. இது 4 பக்கங்களிலும் பாதுகாப்பு சுவரினால் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதில் 3 பக்கங்கள் பாதுகாப்பு அரணாகவும், ஒரு பக்கம் போர்க்காலத்தில் போர் வீரர்கள் கடலூடாகத் தப்பிச் செல்லக் கூடியதாகவும் அமைக்கப்பட்டுள்ளது. இக்கோட்டையானது பின்னர் ஒல்லாந்தரின் கடற்படைத் தளமாக மாற்றப்பட்டு பயன்படுத்தப்பட்டது.









இப்பாலமானது மணல் மற்றும் சுண்ணக்கல்லை கொண்டு இந்தியாவையும் இலங்கையையும் இணைக்கும் முகமாக அமைந்துள்ளது. இப்பாலமானது தமிழில் ராமர்பாலம் எனவும், ஆங்கிலத்தில் அடம்ஸ் பாலம் எனவும், மலையாளத்தில் ராமசேது பாலம் எனவும் அழைக்கப்படுகின்றது. இது 30km நீளத்தினையும், 1.5m - 3.5m நீர்மட்டம் உடைய மணல் திட்டையும் உடையது. வரலாற்று ரீதியான பதிவுகளைப் பார்க்கும் போது 15ம் நூற்றாண்டில் இப்பாலத்தினூடாக மக்கள் போக்குவரத்தினை மேற் கொண்டுள்ளார்கள் என கூறப்படுகின்றது.

### 3.3.மாவட்டத்தின் இயற்கை வளங்கள்









### 3.4 மாவட்டத்தின் வாழ்வாதாரம், மற்றும் பொருளாதாரம்

மன்னார் மாவட்டத்தின் பிரதான வாழ்வாதாரங்களாக விவசாயம், மீன்பிடி மற்றும் கால்நடை வளர்ப்பு என்பன காணப்படுகின்றது. இதில் 70% விவசாயத்திலும், 25% மீன்பிடியிலும், 5% மக்கள் ஏனைய தொழில்களிலும் ஈடுபட்டு வருகின்றார்கள். மேலும் பொதுவாக 61.4% மக்கள் நெற்செய்கையிலும் ஈடுபடுகின்றனர்.

மேலும் பொருளாதார செயற்பாடுகளில் ஆண்களுடைய பங்களிப்பு 70.5% ஆகும். 35-39 வயதுடைய ஆண்களும், 25-29 வயதுடைய பெண்களும் தொழிலில் ஈடுபடுகின்றனர். 5% வேலையில்லாதோர் காணப்படுகின்றனர்.

## 3.5 மாவட்டத்தின் நீர்ப்பாசன முறை

✓ **தேக்கம் அணைக்கட்டு** :

இது மல்வத்து ஓயாவுக்கு குறுக்காக அமைக்கப்பட்டு இரு வாய்க்கால்களுக்கு ஊடாக நீர் திறந்து விடப்படுகின்றது. அதில் ஒரு கால்வாய் கட்டுக்கரைக்குளத்திற்கும் மற்றைய கால்வாய் அகத்திமுறிப்புக்குளத்திற்கும் பாய விடப்படுகின்றது. மேலதிக நீரானது அருவியாறு ஊடாக கடலினை அடைகின்றது.

✓ **கட்டுக்கரை குளம்**:

1969ம் ஆண்டு நீர்பாசனத்திணைக்களத்திற்குள் உள்வாங்கப்பட்டது. இக்குளத்திற்கான நீரானது 16.25 மைல் நீளமான அருவியாற்றினூடாக வந்தடைகின்றது. இக்குளத்தின் நீளம் 4.5 மைலாகும். 31,500 ஏக்கர் அடி நீர் உள்ளது. 30,000 ஏக்கர் வயல் காணிகளுக்கு நீர் பாய்ச்சப்படுகின்றது. 10 வான் கதவுகளைக் கொண்டுள்ளது.

- மேலும் வியாயாத்திக்குளம், அகத்திமுறிப்புக்குளம் போன்ற குளங்களிலிருந்தும் சிறு குளங்களுக்கு நீர் அனுப்பிவைக்கப்படுகின்றது.



அருவி ஆறு



கட்டுக்கரைக்குளம்



தேக்கம் அணைக்கட்டு



## 3.6 மாவட்டத்தின் சனத்தொகைப் பரம்பல்:

**பிரதேச செயலகவாரியாகச் சனத்தொகை**

| பிரதேச செயலகங்களின் விபரம் | மொத்த சனத்தொகை |
|---|---|
| மன்னார் நகரம் | 72,228 |
| நானாட்டான் | 21,310 |
| முசலி | 29,271 |
| மாந்தை மேற்கு | 25,920 |
| மடு | 12,875 |
| மொத்தம் | **161,604** |




**இன ரீதியாகச் சனத்தொகை**

| இனம் | சனத்தொகை |
|---|---|
| தமிழர் | 90,764 |
| இஸ்லாமியர் | 69,769 |
| சிங்களவர் | 1,071 |
| **மொத்தம்** | **161,604** |



## 3.7.மாவட்டத்தின் காலநிலை

மன்னார் மாவட்டமானது ஒரு உலர் வலயப் பிரதேசமாகவும், கூடிய வெப்பநிலையை உடைய மாவட்டமாகவும், குறைந்த அளவு மழைவீழ்ச்சி உடைய மாவட்டமாகவும் காணப்படுகின்றது. மாவட்டத்தின் வெப்பநிலை எல்லையானது 28c-33c ஆகவும், சராசரி மழைவீழ்ச்சியானது 74mm-104mm ஆகவும் காணப்படுகின்றது.

## 3.8.மாவட்டத்தின் அடிப்படைப் புள்ளி விபரங்கள்

- ✓ மாவட்டத்தின் பெயர் : மன்னார்
- ✓ மாகாணத்தின் பெயர் : வட மாகாணம்
- ✓ மொத்த நிலப்பரப்பு : 2,002 Sq.km
- ✓ பிரதேச செயலகங்களின் எண்ணிக்கை : 05
- ✓ கிராம சேவையாளர் பிரிவுகளின் எண்ணிக்கை : 153
- ✓ கிராமங்களின் எண்ணிக்கை : 622
- ✓ வாக்கெடுப்புப் பிரிவுகளின் எண்ணிக்கை : 70
- ✓ மாநகர சபைகளின் எண்ணிக்கை : இல்லை
- ✓ நகர சபைகளின் எண்ணிக்கை : 01
- ✓ பிரதேச சபைகளின் எண்ணிக்கை : 04
- ✓ சுற்று விடுதி, மற்றும் அரச விடுதி : 02
- ✓ வலயக்கல்வி பணிமனை அலுவலர்கள் : 175
- ✓ பாடசாலை மற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை : 146, மற்றும் 3,261 ஆசிரியர்கள்
- ✓ பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை : 06
- ✓ மாகாணசபை உறுப்பினர்களின் எண்ணிக்கை : 05
- ✓ உள்ளுராட்சி அதிகார சபை அங்கத்தவர்களின் எண்ணிக்கை : 46
- ✓ சனத்தொகை : 161,604 (கணக்கெடுப்பு 2015)

## 4. அலுவலக ஒழுங்கமைப்பு மற்றும் ஆளணி விபரம்

### 4.1 அலுவலக ஒழுங்கமைப்பு வரைபடம்



## 4.2 ஆளணி விபரம்

**மாவட்டச் செயலகம்: மன்னார்**

| வகை | சேவை தரம்/மட்டம் | அனுமதிக்கப்பட்ட ஆளணி எண்ணிக்கை | தற்போதுள்ள ஆளணி | வெற்றிடம் |
|---|---|---|---|---|
| **சிரேஸ்ட மட்டம்** | | | | |
| அரசாங்க அதிபர் | SLAS I | 01 | 01 | - |
| மேலதிக அரசாங்க அதிபர் | SLAS I | 01 | 01 | - |
| உதவி மாவட்டச் செயலாளர் | SLAS III | 01 | 01 | - |
| பிரதம கணக்காளர் | SLActS I | 01 | 01 | - |
| பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் | SLActS I | 01 | 01 | - |
| கணக்காளர் | SLActS III | 01 | 01 | - |
| பொறியியலாளர் | SLES III | 01 | 01 | - |
| நிர்வாக உத்தியோகத்தர் | PMAS Supra | 01 | - | 01 |
| **இரண்டாவது மட்டம்** | | | | |
| பாதீட்டு உதவியாளர் | Budget Asst. Service | 01 | - | 01 |
| அபிவிருத்தி இணைப்பாளர் | Development Co-ord Service | 01 | 01 | - |
| பொது முகாமைத்துவ உதவியாளர் தரம் I | PMAS I | 04 | 09 | -05 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | DO | 15 | 12 | 03 |
| பொது முகாமைத்துவ உதவியாளர் தரம் II & III | PMAS II & III | 17 | 12 | 05 |
| தரவுப் பதிவாளர் | DEO | 01 | - | 01 |
| மொழிபெயர்ப்பாளர் | TS | 01 | - | 01 |
| தொழில்நுட்ப உத்தியோகத்தர் | SLTS | 01 | - | 01 |
| தொழில்நுட்ப உதவியாளர் | TA | 01 | 01 | - |
| படவரைஞர் | SLTS | 01 | - | 01 |
| **ஆரம்ப மட்டம்** | | | | |
| சாரதி | DS | 07 | 04 | 03 |
| விடுதிக் காப்பாளர் | OES | - | - | - |
| புத்தகம் கட்டுபவர் | OES I | - | - | - |
| ஆராய்ச்சி | OES I | 01 | 01 | - |
| தொலைபேசி இயக்குனர் | OES I | 01 | - | 01 |
| காவலாளி | OES I & II | 02 | 02 | - |
| சைக்கிள் தகவலாளர் | OES I & II | 01 | 01 | - |
| அலுவலகப் பணியாளர் | OES II | - | - | - |
| அலுவலக பராமரிப்பாளர்/ தோட்டத் தொழிலாளர் | OES II & III | 02 | 03 | -01 |
| துப்பரவுத் தொழிலாளி | OES III | 01 | - | 01 |

**பிரதேச செயலகங்கள் : மன்னார் மாவட்டம்**

| வகை | சேவை தரம்/மட்டம் | அனுமதிக்கப்பட்ட ஆளணி எண்ணிக்கை | தற்போதுள்ள ஆளணி | வெற்றிடம் |
|---|---|---|---|---|
| **சிரேஸ்ட மட்டம்** | | | | |
| பிரதேச செயலாளர் | SLAS I | 05 | 05 | - |
| உதவிப் பிரதேச செயலார் | SLAS III | 05 | 03 | 02 |
| கணக்காளர் | SLActS III | 05 | 05 | - |
| நிர்வாக உத்தியோகத்தர் | PMAS Supra | 05 | - | 05 |
| நிர்வாக உத்தியோகத்தர் (GN) | GN Supra | 05 | 01 | 04 |
| **இரண்டாவது மட்டம்** | | | | |
| அபிவிருத்தி இணைப்பாளர் | Development Co-ord Service | 05 | 04 | 01 |
| பொது முகாமைத்துவ உதவியாளர்– தரம் I | PMAS I | 20 | 16 | 04 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | DO | 25 | 11 | 14 |
| பொது முகாமைத்துவ உதவியாளர் – தரம் II & III | PMAS II & III | 96 | 65 | 31 |
| தரவுப் பதிவாளர் | DEO | 05 | - | 05 |
| மொழிபெயர்ப்பாளர் | Translator Service I | 05 | - | 05 |
| தொழில்நுட்ப உத்தியோகத்தர் | SLTS | 05 | - | 05 |
| தொழில்நுட்ப உதவியாளர் | TA | 05 | 05 | - |
| கிராம சேவையாளர் | GNS I , II & III | 153 | 134 | 19 |
| **ஆரம்ப மட்டம்** | | | | |
| சாரதி | Driver Service | 10 | 10 | - |
| விடுதிக் காப்பாளர் (மடு) | Care Taker | 01 | *01 (Casual) | - |
| புத்தகம் கட்டுபவர் | OES I | | | |
| காவலாளி | OES II | 10 | 02 | 08 |
| சைக்கிள் தகவலாளர் | OES II | 05 | 03 | 02 |
| அலுவலக பராமரிப்பாளர்/ தோட்டத் தொழிலாளர் | OES III | 10 | 08 | 02 |
| துப்பரவுத் தொழிலாளி | OES I, II & III | 05 | 03 | 02 |

| வகை | முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்திற்கமைய அனுமதித்த ஆளணி விபரம் | பதவி ஆளணி | வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| | மாவட்டச்செயலகம் | | |
| சிரேஷ்ட நிலை மட்டம் A | 01 | 01 | - |
| மூன்றாம் நிலை மட்டம் B | 07 | 06 | 01 |
| இரண்டாம் நிலை மட்டம் C | 43 | 35 | 08 |
| ஆரம்ப நிலை மட்டம் D | 15 | 11 | 04 |
| தற்காலிகம்<br>அமையம்<br>ஒப்பந்தம் | | -<br>-<br>- | |
| | பிரதேசச் செயலகங்கள் | | |
| மூன்றாம் நிலை மட்டம் B | 25 | 14 | 11 |
| இரண்டாம் நிலை மட்டம் C | 319 | 235 | 84 |
| ஆரம்ப நிலை மட்டம் D | 41 | 27 | 14 |
| தற்காலிகம்<br>அமையம்<br>ஒப்பந்தம் | | -<br>01<br>- | |

# 5. செயலாற்றுகை

## 5.1 பொது நிர்வாகச் செயற்பாடுகள்

### 5.1.1. நிர்வாகக்கிளையின் செயற்பாடுகள்

இம்மாவட்ட நிர்வாகம் மன்னார் நகரம், நானாட்டான், முசலி, மடு, மாந்தை மேற்கு ஆகிய பிரதேசச் செயலகப் பிரிவுகளைக் கொண்டுள்ளது. இந்த 05 பிரதேசச் செயலகப்பிரிவுகளும் பிரதேசச் செயலகங்களாக இயங்கிக்கொண்டு வருகின்றன.

மாவட்டச்செயலகம், பிரதேச செயலகங்களில் உள்ள அரச முகாமை உதவியாளர் சேவைக்குரிய தரத்தில் 137 அனுமதிக்கப்பட்ட ஆளணிகள் இருந்தபோதிலும் 47 வெற்றிடங்கள் காணப்படுகின்றன. பொதுநிர்வாக அமைச்சின் கீழ் புதிதாக பட்டதாரிப்பயிலுநர் ஒருவர் இணைக்கப்பட்டிருந்தார்.

பிரதேசச் செயலகங்கள் மூலம் பொது மக்களுக்கு தேசிய அடையாள அட்டை பெற்றுக்கொள்வதற்காக 4,400 விண்ணப்பங்கள் ஆட்களைப்பதிவு செய்யும் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டு, உரிய முறையில் பொது மக்களுக்கு கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்கப்படுகின்றன.

அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினால் (NPS) எமது மாவட்டச் செயலகம் 2014 ம் ஆண்டுக்காக தெரிவு செய்யப்பட்டதுடன் 2015.10.12ம் திகதி மாவட்டச் செயலகங்களுக்கிடையில் நடாத்தப்பட்ட தேசிய உற்பத்தித்திறன் போட்டியில் அனைத்து அலுவலர்களும் ஆர்வமுடன் கலந்து கொண்டனர்.






### 5.1.2 கிராம அலுவலர் பிரிவுகள்

| பிரதேசச் செயலகப் பிரிவு | கிராம அலுவலர் பிரிவு |
|---|---|
| மன்னார் நகரம் | 49 |
| நானாட்டான் | 31 |
| மாந்தை மேற்கு | 36 |
| மடு | 17 |
| முசலி | 20 |
| **மொத்தம்** | 153 |

இம்மாவட்டம் 153 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்டிருந்த போதிலும் 01.01.2015 இல் 134 கிராம அலுவலர்கள் கடமையாற்றி வருகின்றனர். இதில் 19 கிராம அலுவலர் பிரிவுகள் வெற்றிடமாக காணப்பட்டு வருகின்றன.

### 5.1.3. வருமானச் சேகரிப்பு செயற்பாடுகள்

2015ம் வருடத்தில் மாவட்டச் செயலகத்தினால் பெறப்பட்ட வருமான விபரம் பின்வருமாறு,

| தலைப்பு | விவரணம் | தொகை |
|---|---|---|
| 1003.07.02 | பதிவாளர் நாயகத் திணைக்களப் பதிவுக்கட்டணம் | **2,228,245.00** |
| 1003.07.03 | தனியார் மரப் போக்குவரத்து | **352,604.00** |
| 1003.07.05 | பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்புற்ற அனுமதிப்பத்திரக் கட்டணம் | **1,200.00** |
| 1003.07.99 | பிற வருமானங்கள் | **68,720.00** |
| 2002.01.01 | அரசாங்கக் கட்டடங்கள் மீதான வாடகை | **1,064,130.67** |
| 2002.01.99 | பிற வாடகைகள் | **49,388.00** |
| 2002.02.99 | வட்டி | **1,604,924.54** |
| 2003.02.03 | ஆட்பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவுக் கட்டணம் | **750.00** |
| 2003.02.06 | தாவர விலங்கியல் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டணம் | **11,880.00** |
| 2003.02.13 | பரீட்சைக் கட்டணம் | **18,650.00** |
| 2003.02.14 | மோட்டார் வாகனக் கட்டணம் | **8,460,159.00** |
| 2003.02.99 | பிற சில்லறைப் பொருட்கள் | **35,471.83** |
| 2003.04.00 | மோட்டார் சைக்கிள் வழங்கல் | **-50,000.00** |
| 2003.99.00 | பிற வருமானங்கள் | **9,885,400.43** |
| 2004.01.00 | விதவைகள் அனாதைகள் பங்களிப்பு | **6,461,062.31** |
| 2006.02.00 | மூலதனச் சொத்துக்களின் விற்பனை | **693,736.00** |
| **மொத்தம்** | | **30,886,321.78** |

### 5.1.4 உள்ளகக் கணக்காய்வின் நடவடிக்கைகள்

மன்னார் மாவட்டச் செயலகத்திலும் மற்றும் அதன் கீழுள்ள 05 பிரதேச செயலகங்களிலும் ஏற்படக்கூடிய அபாய முகாமைத்துவத்தின் பயன்தரும் தன்மை, அதன் கட்டுப்பாடு மற்றும் அவற்றின் ஆட்சி வழிமுறைகள் ஆகியவற்றை மதிப்பீடு செய்து அவற்றை முன்னேற்றுவதற்காக முறையான மற்றும் ஒழுங்கான அணுகு முறைகளைக் கொண்டுவந்து அவைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மன்னார் மாவட்டச் செயலகத்தின் நடவடிக்கைத் திட்டத்தில் வடிவமைக்கப்பட்டுள்ள நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக மன்னார் மாவட்டச் செயலகத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

மேலும் நிதி அமைச்சின் கீழுள்ள முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தினால் 2009.06.09 ஆந் திகதியில் வெளியிடப்பட்டுள்ள DMA/01 எனும் இலக்கமுடைய சுற்றறிக்கையின் 09 ஆம் பந்தியின் பிரகாரம் 2015ம் ஆண்டுக்குரிய உள்ளகக் கணக்காய்வு ஆரம்ப அறிக்கை 2015.04.20ஆந் திகதியில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இதற்கான கலந்துரையாடல் கூட்டம் 2015.05.26ஆந் திகதியில் நடாத்தப்பட்டது.

சகல மாவட்டச் செயலாளர்களுக்கும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் 2015.03.19 ஆந் திகதியில் வழங்கியுள்ள HAF/F/GEN/026 எனும் இலக்கமுடைய கடிதத்திற்கு அமைவாக 2015ம் ஆண்டின் 01 ஆம் 02 ஆம் மற்றும் 03 ஆம் காலாண்டுக்குரிய உள்ளகக் கணக்காய்வு மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டது. ஒவ்வொரு காலாண்டுகளுக்குமான கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்டுள்ள விடயங்கள் பின்வருமாறு

| கணக்காய்வு அறிக்கைகளின் பெயர்கள் | அறிக்கைகள் சமர்ப்பிக்கப் பட்டுள்ள திகதிகள் | கூட்டங்கள் நடாத்தப்பட்ட திகதிகள் | கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்டுள்ள விடயங்கள் |
|---|---|---|---|
| ஆரம்ப அறிக்கை | **20.04.2015** | **26.05.2015** | முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தினால் 2009.06.09 ஆந் திகதியில் வெளியிடப்பட்டுள்ள DMA/01 எனும் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களச் சுற்றறிக்கையின் 03 வது இணைப்பு சம்பந்தமானவை |
| 01ஆம் காலாண்டுக்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டத்திற்கான அறிக்கை | **30.04.2015** | **29.10.2015** | நிதி அமைச்சின் செயலாளரினால் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு 2015.02.15 ஆந் திகதியில் அனுப்பி வைக்கப்பட்டுள்ள PF/RED/CAO/2015 எனும் இலக்கமுடைய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமானவை |
| 02ஆம் காலாண்டுக்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டத்திற்கான அறிக்கை | **31.07.2015** | **17.12.2015** | கைவிரல் அடையாள இயந்திரத்தின் அவசியமான அறிக்கைகள் மற்றும் நாளாந்த தினவரவு இடாப்பில் பதியப்படும் ஒழுங்கீனமான உள்வருகை மற்றும் வெளியேறுகை நேரங்கள் சம்பந்தமானவை |
| 03ஆம் காலாண்டுக்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டத்திற்கான அறிக்கை | **31.10.2015** | **26.01.2016** | மன்னார் மாவட்ட செயலகத்தில் செயற்படக் கூடிய திறைசேரி நடவடிக்கைக்குரிய பொறிமுறை மற்றும் உத்தியோகத்தர்களின் தற்போதைய பதவியிலிருந்து இன்னுமொரு பதவிக்கு தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமான அடிப்படையிலோ விடுவித்தல் மற்றும் அலுவலக நேரத்தில் மின்சாரம் மற்றும் தொலைபேசிப் பாவனைகளால் ஏற்படும் வீண்விரயங்கள் சம்பந்தமானவை |

### 5.1.5 மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் செயற்பாடுகள்

| இல | நடத்தப்பட்ட நிகழ்வுகள் | நடத்தப்பட்ட நிகழ்வுகளின் எண்ணிக்கை | பங்கு பற்றியவர்கள் எண்ணிக்கை | செலவிடப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 01 | O/L மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் நிகழ்வு | 17 | 505 | - |
| 02 | A/L மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் நிகழ்வு | 13 | 400 | - |
| 03 | சுயதொழில் ஊக்குவிப்பு நிகழ்ச்சி | 02 | 72 | 3,880.00 |
| 04 | ஆசிரியர்களுக்கான விழிப்பூட்டல் நிகழ்ச்சி | 01 | 39 | 35,000.00 |
| 05 | தொழில் சவாலை வெற்றிக்கொள்ளல் | 02 | 59 | 15,320.00 |
| 06 | தேவைப்பாட்டின் மீதான பயிற்சிநெறி | 03 | 79 | 26,820.00 |
| 07 | சுயாதீன செயற்பாட்டு நிகழ்ச்சி | 02 | 61 | 26,170.00 |
| 08 | வேலை தேடுவோருக்கான விழிப்பூட்டல் நிகழ்ச்சி | - | 1,059 | - |
| 09 | செயல்த்திறனை முன்னேற்றுவதற்கான விழிப்பூட்டல் நிகழ்ச்சி | - | 182 | - |
| 10 | வலது குறைந்தோருக்கான விழிப்பூட்டல் நிகழ்ச்சி | 23 | 487 | - |
| 11 | பெற்றோருக்கான விழிப்பூட்டல் நிகழ்ச்சி | 03 | 303 | 12,000.00 |
| **மொத்தம்** | | | | **119,190.00** |

### 5.1.6. தேர்தல்கள் திணைக்களச் செயற்பாடுகள்

2015ம் ஆண்டிற்கான வாக்காளர் கணக்கெடுப்புப் பணிகள் இம்மாவட்டத்தின் 153 கிராம அலுவலர் பிரிவுகளில் கணக்கெடுப்பாளர்கள் நியமிக்கப்பட்டு வாக்காளர் இடாப்பு மீளாய்வு பணி 22.04.2015இல் ஆரம்பிக்கப்பட்டது. இப்பணியின் செயலாற்றுகை பற்றி ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் போதனா வகுப்புக்கள் நடாத்தப்பட்டதைத் தொடர்ந்து 2015ம் ஆண்டிற்கான வாக்காளர் கணக்கெடுப்பிற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்பொழுது கணக்கெடுப்பாளர்களாக நியமிக்கப்பட்ட கிராம அலுவலர்கள் வழங்கிய படிவங்களின் மூலமாக இறப்பெய்தியோர், வதிவிடமாற்றம் போன்ற காரணங்களின் நிமித்தம் தேர்தல்கள் ஆணையாளர் அவர்களது சுற்றுநிரூபத்திற்கமைவாக நீக்கப்பட்டு 18 வயது பூர்த்தியானோர் புதிதாக வதிவிற்கு வந்தோர் மற்றும் நடைமுறை இடாப்பில் உள்ளோர் ஆகியோரால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

இதன் பிரகாரம் 2015ம் ஆண்டிற்கான மொத்த வாக்காளர் எண்ணிக்கை 83,224 ஆகும். மேலும் 2015ம் ஆண்டில் 1980ம் ஆண்டின் 44ம் இலக்க தேருநர் பதிவு சட்டத்தின் 9(3) கீழ் வாக்கெடுப்பு நிலையங்கள் மீளாய்வு செய்யப்பட்டு புதிதாக 04 வாக்கெடுப்பு மாவட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. இதன் மூலம் 2015ம் ஆண்டில் வாக்கெடுப்பு மாவட்டங்களின் எண்ணிக்கை 74 ஆக அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் 2015ம் ஆண்டில் நடைபெற்ற சனாதிபதி தேர்தல், பாராளுமன்ற தேர்தல்கள் நடாத்தப்பட்டதுடன், இம்மாவட்டத்தின் சகல அரசாங்க ஊழியர்களினது பங்களிப்புடன் தேர்தல் சிறப்பாக நடைபெற்றது.

### 5.1.7. பதிவாளர் நாயகத் திணைக்களச் செயற்பாடுகள்

**1.ஆவணப்பதிவு.**

| விபரம் | எண்ணிக்கை | அறவிடப்பட்ட கட்டணம் (ரூ.) |
|---|---|---|
| **உறுதிகள் மற்றும் ஆவணங்களினைப் பதிவு செய்தல்** | | |
| பதிவிற்காக பெறப்பட்ட உறுதிகள் | 3,754 | 394,700.00 |
| **பிரதிகள் வழங்கல்** | | |
| காணிப்பதிவேட்டுத்தாள் பிரதிகளுக்கான விண்ணப்பங்கள் | 2,771 | 606,100.00 |
| உறுதிப்பிரதிகளுக்கான விண்ணப்பங்கள் | 1,109 | 607,500.00 |
| **ஆவணங்களைத் தேடுதல் செய்தல்** | | |
| காணிப்புத்தகங்களைத் தேடுவதற்கான விண்ணப்பங்கள் | 59 | 30,000.00 |
| உறுதிகள் மற்றும் வேறு ஆவணங்களைத் தேடுவதற்கான விண்ணப்பங்கள் | 19 | 9,500.00 |
| **ஏனையவை** | | |
| உறுதிகளின் இணைப்பிரதிகளின் எண்ணிக்கை | 3,318 | |
| இணைப்பிரதிகளில் ஒட்டப்பட்ட முத்திரைகளின் பெறுமதி | | 14,241,335.00 |

**2.சிவில்ப் பதிவு.**

| விபரம் | எண்ணிக்கை | அறவிடப்பட்ட கட்டணம் |
|---|---|---|
| பதிவு செய்யப்பட்ட விவாகங்கள் | 71 | 92,250.00 |
| அனுமதிக்கப்பட்டட பிரதிக்கினைகள் (24ம் பிரிவு) | 54 | - |
| வழங்கப்பட்ட அனுமான வயதுச் சான்றிதழ்கள் | 29 | - |

| விபரம் | எண்ணிக்கை | | அறவிடப்பட்ட கட்டணம் |
|---|---|---|---|
| | விண்ணப்பங்கள் | பிரதிகள் | |
| விவாக, பிறப்பு, இறப்பு மற்றும் அனுமான வயதுச் சான்றிதழ்களின் பிரதிகள் வழங்கல் | 1,059 | 1,665 | 174,900.00 |
| விவாக, பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ்களின் மொழிபெயர்ப்பு | 217 | 250 | 125,000.00 |

### 5.1.8. அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகள்

| செயற்றிட்டம் | ஒதுக்கீடு | செலவுகள் |
|---|---|---|
| அனர்த்த முகாமைத்துவப் பயிற்சி மற்றும் விழிப்புணர்வுகள் | 306,000.00 | 270,760.00 |
| அனர்த்தத் திட்டமிடல் மற்றும் தயார்படுத்தல் | 341,000.00 | 268,202.00 |
| அனர்த்தம் குறைப்பு செயற்திட்டம் | 22,883,544.92 | 22,883,544.92 |





கடற்கரை தூய்மை தினம் நிகழ்வு 21.செப்ரெம்பர் 2015





### 5.1.9. மோட்டார் போக்குவரத்துத் திணைக்களச் செயற்பாடுகள்

| தொ.இல | மாதம் | புதிய விண்ணப்பம் | புதுப்பித்த விண்ணப்பம் | தலைமைச் செயலகத்திற்கு அனுப்பப்பட்ட விண்ணப்பம் | கிடைக்கப் பெற்ற இலக்கத் தகடுகள் | விநியோகிக்கப் பட்ட இலக்கத் தகடுகள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | தை | 114 | 16 | 325 | 11 | 11 |
| 2 | மாசி | 193 | 23 | 228 | 31 | 20 |
| 3 | பங்குனி | 275 | 34 | 152 | 20 | 21 |
| 4 | சித்திரை | 193 | 26 | 183 | 62 | 23 |
| 5 | வைகாசி | 242 | 24 | 276 | 0 | 28 |
| 6 | ஆனி | 195 | 31 | 278 | 75 | 57 |
| 7 | ஆடி | 257 | 16 | 184 | 65 | 52 |
| 8 | ஆவணி | 249 | 37 | 280 | 57 | 39 |
| 9 | புரட்டாதி | 336 | 29 | 153 | 50 | 50 |
| 10 | ஐப்பசி | 314 | 44 | 422 | 51 | 56 |
| 11 | கார்த்திகை | 180 | 35 | 291 | 57 | 32 |
| 12 | மார்கழி | 295 | 40 | 164 | 200 | 39 |
| **மொத்தம்** | | **2,843** | **355** | **2,936** | **679** | **428** |

## 5.1.10.ஓய்வூதியச் செயற்பாடுகள்

| ஓய்வூதிய வகை | மன்னார் நகரம் | | நானாட்டான் | | முசலி | | மடு | | மாந்தை மேற்கு | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஓய்வூதியர் எண்ணிக்கை | மொத்தப் பெறுமதி | ஓய்வூதியர் எண்ணிக்கை | மொத்தப் பெறுமதி | ஓய்வூதியர் எண்ணிக்கை | மொத்தப் பெறுமதி | ஓய்வூதியர் எண்ணிக்கை | மொத்தப் பெறுமதி | ஓய்வூதியர் எண்ணிக்கை | மொத்தப் பெறுமதி | ஓய்வூதியர் எண்ணிக்கை | மொத்தப் பெறுமதி |
| குடிசார் | 579 | 100,236,836.22 | 146 | 37,207,682.23 | 26 | 6,309,895.08 | 33 | 7,616,969.69 | 43 | 848,740.27 | **827** | **152,220,123.49** |
| விதவைகள் | 256 | 47,834,399.16 | 75 | 16,797,705.39 | 11 | 2,541,546.84 | 10 | 2,308,172.63 | 25 | 460,210.60 | **377** | **69,942,034.62** |
| அநாதைகள் | 01 | 259,723.80 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | **01** | **259,723.80** |
| ஊனமுற்றோர் | 06 | 1,183,045.20 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | **06** | **1,183,045.20** |
| தபுதாரர் | 10 | 1,980,552.48 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | **10** | **1,980,552.48** |
| படையினர் | 01 | 28,416.48 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | **01** | **28,416.48** |
| வெளிநாடு | 01 | 321,086.40 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | **01** | **321,086.40** |
| உள்ளூராட்சி ஓய்வூதியம் | | | | | | | | | | | | |
| குடிசார் | 13 | 2,446,969.80 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | **13** | **2,446,969.80** |
| விதவைகள் | 12 | 2,467,399.32 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | **12** | **2,467,399.32** |
| மொத்தம் | 879 | **156,758,428.86** | **221** | **54,005,387.62** | **37** | **8,851,441.92** | **43** | **9,925,142.32** | **68** | **1,308,950.87** | **1,248** | **230,849,351.59** |

### 5.1.11. தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களச் செயற்பாடுகள்

இந்த நாட்டின் சமூகப் பொருளாதார நிலைகள் சம்பந்தமாக புள்ளிவிபரத்தரவுகளைச் சேகரித்தல், வகைப்படுத்தல், ஆய்வு செய்தல், வெளியிடல், புள்ளிவிபர குறிகாட்டிகளை கணித்தல் ஆகிய பணிகள் மத்திய அரசாங்க முகவர் நிலையமான தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தைச் சார்ந்தது. அரசாங்கத்தின் தேசிய திட்டமிடல், கொள்கை வகுத்தல் போன்றவற்றிக்கும் தேவையான தகவல்கள் வழங்கி வருகின்றது. சேகரிக்கப்பட்ட இத்தரவுகள் சனத்தொகை, விவசாயம், வர்த்தகம், கைத்தொழில், விலைகள், தேசிய வருமானம் போன்ற பல விடயங்களை உள்ளடக்குகின்றது.

மாவட்ட புள்ளிவிபரக்கிளையால் 2015ம் ஆண்டு செய்யப்பட்ட புள்ளிவிபர வேலைகள் கீழே தரப்படுகின்றது.

- **இலங்கைத் தொழிற்பல அளவீடு**
- **நெல் விளைச்சல் மதிப்பீட்டு அளவீடு**
- **கைத்தொழில் வருடாந்த அளவீடு**
- **நிர்மாணக் கைத்தொழில் அளவீடு**
- **நெற்புள்ளிவிபரம்**
- **மேட்டு நிலப்பயிர்ச்செய்கை**
- **கால்நடைப்புள்ளிவிபரம்**
- **சில்லறை உற்பத்தி விலைகள் புள்ளிவிபரம்**
- **உள்ளூராட்சி புள்ளிவிபரம்**

### 5.1.12. பயிற்சிகளும் இயலளவு மேம்படுத்துகையும்

பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் **2015**ஆம் ஆண்டுக்கான பயிற்சி நெறியும், இயலளவு மேம்படுத்துகையும் என்ற தலைப்பின் கீழ் ரூபா **450,000/=** ஒதுக்கீடு செய்யப்பட்டு பின்வரும் பயிற்சி நெறிகள் எமது மாவட்டச் செயலக திறன் விருத்தி அலகில் நடாத்தப்பட்டன. இப் பயிற்சி நெறிக்காக ரூபா **445,632/=** செலவு செய்யப்பட்டன.

| இல | பயிற்சி நெறி | பங்கு பற்றியவர்கள் விபரம் | பயிற்சிக் காலம் | பங்கு பற்றியவர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பான பயிற்சி | மாவட்டச் செயலக மற்றும் பிரதேசச் செயலக முகாமை உதவியாளர்கள் | (2 நாட்கள்) 29.05.2015, 05.06.2015 | 36 நபர்கள் |
| 2 | புதிதாக இணைக்கப்பட்ட முகாமை உதவியாளர்களுக்கான அறிமுகப்பயிற்சி -2015 | மாவட்டச் செயலக மற்றும் பிரதேசச் செயலக புதிய முகாமை உதவியாளர்கள | (10 நாள்) 21.09.2015-05.10.2015 | 13 நபர்கள் |
| 3 | NEW CIGAS | மாவட்டச் செயலக மற்றும் பிரதேசச் செயலக கணக்காளர்கள் மற்றும் முகாமை உதவியாளர்கள் | (01 நாள்) 17.11.2015 | 48 நபர்கள் |
| 4 | உற்பத்தித்திறன் மற்றும் 5S பயிற்சியும் | மாவட்டச் செயலக அபிவிருத்தி அலுவலர்கள் மற்றும் முகாமை உதவியாளர்கள் | 24.07.2015 | 10 நபர்கள் |
| 5 | விருந்தோம்பல் மற்றும் சுத்தப்படுத்தல் சேவைக்கான பயிற்சி | மாவட்டச் செயலக மற்றும் பிரதேசச் செயலக அலுவலகப்பணியாளர்கள் | 10.10.2015 | 34 நபர்கள் |
| 6 | கொள்ளல் நடமுறைக்கான பயிற்சி | மாவட்டச் செயலக அனைத்து அலுவலர்களுக்கும் | 30.12.2015 | 225 நபர்கள் |

### 5.1.13. தகவல் தொழில்நுட்பப் பூங்காவின் செயற்பாடுகள்

